30.8.2009

ஏதிரொலி



## நோயாளிகளின் பாதுகாப்பை அதிகரிக்க

# நிலையான சிகிச்சை முறை தேவை

### முதன்மைச் செயலர் வி.கே.சுப்புராஜ் பேச்சு

சென்னை, ஆக. 30- நோயாளிகளின் பாதுகாப்பை அதிகரிக்க நிலையான சிகிச்சைமுறைகளை உருவாக்க வேண்டுமென்று, தமிழ்நாடு அரசின் நலவாழ்வுத் துறை முதன்மை செயலர் வி.கே. சுப்புராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்து மருத்துவர்களுக்கும் மருத்துவ பணியாளர்களுக்கும், இம்முறைகளில் பயிற்சி அளித்து அம்முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் இன்று சென்னையில் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையமும் மருத்துவதுறை அங்கீகார அமைப்பின் இந்திய கூட்டமைப்பும் ஏற்பாடு செய்திருந்த 'நோயாளிகளின் பாதுகாப்பு' என்ற மாநாடு ஒன்றை துவங்கி வைத்தார். உலகநலவாழ்வு அமைப்பு அறிமுகப்படுத்தியுள்ள அறுவை சிகிச்சை தணிக்கை பட்டியலை சுட்டிக்காட்டிய அவர், அது சில நாடுகளில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தவறான மருந்துகளின் பயன்பாட்டை தவிர்க்க தமிழக அரசு 40 மருத்துவமனைகளில் கணினிகளை பயன்படுத்தி அச்சிடப்பட்ட மருத்துவ சீட்டுகளை வழங்குகிறது. ரூ.40 கோடி செலவில் மேலும் 200 மருத்துவ மனைகளில் இதை அமல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. மருத்துவர்கள் மருந்து களை பரிந்துரைப்பதில் உள்ள பரவலான வேறுபாட்டாலும் தவறான சிகிச்சைகள் ஏற்படுகின்றன.

இந்திய மருத்துவமனைகளில் போடப்படும் ஊசிகளில் 65 சதவீதம் பாதுகாப்பற்ற முறைகளில் உள்ளதாக ஒரு தனியார் தன்னாவ நிறுவனத்தின் ஆய்வு கூறுகிறது. உலக நலவாழ்வு அமைப்பு தெரிவு செய்துள்ள ஒவ்வொரு நோயாளிக்கும் புதிய தனித்தனி ஊசியை பயன்படுத்தும் முறையையே தமிழக அரசு தன்னுடைய மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவ மனைகளிலும் பாதுகாப்பான ஊசி போடும் விகிதம் 70 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதனை 100 சதவீதமாக உயர்த்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் ஏழு கோடி மக்களிடையே ஹெப்படைடிஸ் பீ வைரஸ் உள்ளது. மருத்துவமனைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் கூடுவதால் மற்றவர்களுக்கும் இது பரவ வாய்ப்பு உள்ளது. இந்த வைரஸ் மருத்துவ பணியாளர்களை பாதிக்காமல் தடுக்க அவர்களுக்கு பணியில் சேர்ந்த உடனேயே தடுப்பூசிபோட வேண்டும் என்று சுப்புராஜ் மேலும் கூறினார்.

ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக் கழகத்தின் கே.வி.சோமசுந்தரம் ஆகியோர் பேசினர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கிய விருந்தினர்களான வி.கே.சுப்புராஜ், மருத்துவத் துறை அங்கீகார இந்திய கூட்டமைப்பின் தலைவர் அகில் சங்கல், காமன் வெல்த் மருத்துவ கழகத்தின் தலைவர் அருள்ராஜ் ஆகியோரை ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக் கழகத்தின் வேந்தரும் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தின் மேலாண்மை இயக்குனரான வி.ஆர். வெங்கடாசலம் கவுரவித்தார். நன்றி உரையாற்றிய மருத்துவ இயக்குனர் ஜே.தாமோதரன் பல மருத்துவமனைகளில் நோயாளிகள் பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்த இந்த மாநாடு உதவும் என்று கூறினார்.